தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2023

**9 வயதுப்பிரிவு**
(01.01.2014 – 31.12.2014 வரையில் பிறந்தோர்)

## தமிழீழத் தேசியக்கொடி

ஒரு நாட்டின் தேசிய அடையாளங்களுள் முதன்மையானது தேசியக்கொடி. அது அந்நாட்டவர் எல்லோருக்கும் உரித்துடையது. அரசும் நாட்டு மக்களும் தத்தமது தேசியக்கொடியை மதிக்கிறார்கள். நாமும் பல்லாயிரம் மாவீரர்களினதும் மக்களினதும் உயரிய அர்ப்பணிப்புகளால் உருவாக்கப்பட்ட எங்கள் தாய்நாடாகிய தமிழீழத்தின் தேசியக்கொடியை உயிரெனக் காக்க வேண்டும்.

தமிழீழத் தேசியக்கொடியிலுள்ள சிவப்பு நிறம் எல்லோரும் சமம் என்ற அறமும் குமுகாய நீதியும் நிலைநாட்டப்பெற வேண்டும் என்ற புரட்சிகரமான அரசியல் இலக்கைக் குறிக்கிறது. மஞ்சள் நிறம் தமிழீழ விடுதலைப் போராட்டம் அறம் தழுவியது என்பதையும் தமிழீழ தேசம் எப்பொழுதும் அறத்தின் பக்கம் நிற்கும் என்பதையும் குறியீடு செய்கிறது. கறுப்பு நிறம் விடுதலைப் பாதையில் ஏற்படும் சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொள்ளக்கூடிய மன உறுதியும் அசைக்க முடியாத நம்பிக்கையும் வேண்டும் என்பதைக் குறித்து நிற்கிறது. வெள்ளை நிறம் விடுதலை அமைப்பும் மக்களும் தலைவர்களும் தூய்மையையும் நேர்மையையும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

எங்கள் தேசியக்கொடியில் உள்ள பாயும்புலி தமிழரது வரலாற்றுத் தொடர்ச்சியின் அடையாளமாகத் தலைவர் மாமாவால் தெரிவுசெய்யப்பெற்றது. எழுத்துகளுடன் கூடிய கொடி தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கொடியாகும். எழுத்துகள் இல்லாத கொடி தமிழீழ நாட்டின் தேசியக்கொடி ஆகும். இது 1990 நவம்பர் 21 ஆம் நாள் முதன்முதலாகத் தலைவர் மாமாவால் ஏற்றப்பட்டு, தமிழீழத் தேசியக் கொடியாக நாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்படும் பொழுது 'ஏறுது பார் கொடி ஏறுது பார்…' என்ற கொடிவணக்கப் பாடல் ஒலிக்க விடப்படும். அனைவரும் எழுந்து நிமிர்ந்து நின்று, அமைதி காத்து, வலது கையை இடப்பக்க நெஞ்சின் மீது வைத்து கொடிவணக்கம் செய்தல் வேண்டும். தமிழீழத் தேசியக்கொடிக்கு உயரிய மதிப்பைக் கொடுக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

நன்றி,

வணக்கம்.